Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# முத்தரையர்மன்னர்குவாவன்சாத்தனின்வரலாற்றில்மலையடிப்பட்டிரெங்க நாதன்குடவரைக்கோயில்

முனைவர்ஆ. ஜெகதீசன்
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்டாக்டர்கலைஞர்
அரசுகலைக்கல்லூரிகுளித்தலை, கரூர்மாவட்டம்அ.கு.எண்: 639 120
jaga72try@gmail.com

49

**முன்னுரை:**

தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர்களை வென்றதனால் முத்தரையர் என்றும் மூத்த அரையர்களே முத்தரையர்கள் என்றும், முத்து குளிக்கும் பகுதியை. ஆண்டதால் முத்தரையர் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் முத்தரையர் பெயர் காரணம் பற்றிபல குறிப்புக்களை பதிவு செய்துள்ளனர். தமிழக வரலாற்றில் மூவேந்தர்களுக்கு இணையாக சிறந்த ஆட்சியை வழங்கிய முத்தரையர் மன்னர்களின் ஆட்சியின் சாதனைகள் ஏராளம். அவ்வகையில் முத்தரையர் மன்னர்களின் நிர்வாகம், கொடை பண்புகள், நீர் மேலாண்மை திட்டங்கள், கட்டடக்கலை, குடைவரை கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவற்றில் சிறந்த சேவையினை முத்தரையர் மன்னர்கள் அளித்துள்கனர். அதனடிப் படையில் முத்தரையர் மன்னர் குவாவன்சாத்தன் புதுக்கோட்டை மாவட்டம் இகிள்ளுக்கோட்டை அருகே மலையடிப் பட்டியில் அமைத்த குடைவரை கோயில் பற்றிய செய்தினை இனி இக்கட்டுரையை காண்போம்.





மன்னன் குவாவன்சாத்தனின் மலையடிப் பட்டிகுகைக் கோயில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மலையை கண்ட இடங்களிலெல்லாம் அழியாத புகழுடன் குகைக்கோயில்களை முத்தரையர் மன்னர்கள் அமைத்தனர். அவ்வாறு அமைத்த கோயில்களில் ஒன்று தான் மலையடிப்பட்டி இவ்வூர் புதுக்கோட்டையிலிருந்து 33 கிலோ மீட்டர் தொலைவில் கீரனூர, கிள்ளுக்கோட்டை சாலையில் உள்ளது.

இக்கோயிலை, கல்வெட்டு, திருவாலத்தூர் மலை என்று குறிப்பிடுகிறது. திருமலையிலும் சிவபெருமானுக்கும், விஷ்ணுவுக்கும் ஒரே மலையில் இரண்டு குகை

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கோவில்கள் அமைத்துள்ளனர். அனந்த சயன மூர்த்தியாக காட்சி தரும் விஷ்ணு குகைக் கோயில், திருப்பதிக்கு நிகரான சக்தி கொண்டதாகும் என்று இங்குள்ள மக்கள் நம்புகின்றனர்.

இக்கோயிலில் நந்திவர் மபல்லவன்காலத்தில் (கிபி-775-826) கல்வெட்டுஉள்ளது. அக்கல்வெட்டில் இக்கோயில் 16 வது ஆட்சி ஆண்டில் அதாவது கிபி730ல் குவாவன் சாத்தன் என்பவனால் இந்தமலையை குடைந்து சிவனுக்கு கோயில் எடுப்பித்ததாக கூறுகிறது. லிங்கத்தை வைத்து அதற்கு வாகீஸ்வரர் என்று பெயரிட்டு அழைத்துள்ளனர். இச்செய்தி திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயிலுக்கு அருகில் உள்ளது.



பு.க.எண்.18ல்,
வரதஸ்ரீ கோவிசய
தந்திபர்மற்க்குயாண்டுப
தினாறாவது விடேல் விடுகு
முத்தரையனாகிய
குவாவன் சாத்தனேன்
திருவாலத்தூர்மலை
தளியாக குடைந்து (பட்டாரரைபிரதிஸ்டை)செ
ய்து இத்தளியை.
கீழ செங்கிளி நாட்டு நாட்டா
நாட்டார்க்கு செய்த என்று கல்வெட்டு கூறுகிறது. இக்குடைவரை விடேல் விடுகுமுத்தரையன் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் கருவறையை அடுத்துள்ள அர்த்த மண்டபச்சுவரில், ஏழு சப்தமாதர்கள், கணேசர், வீரபத்திரர், சிவன், விஷ்ணு, ஆகியோரதுசிற்பங்கள்மலையைகுடைந்து செதுக்கப்பட்டுள்ளது எருமை முகமும்மனித உடலும் கொண்ட மகிஷாசுரனுடன், அன்னை ஆதிபரா சக்தி சிங்கத்தின் மீதமர்ந்து அரக்கனை அடித்து வீழ்த்திய கோர காட்சி மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.



பல்லவர்கலை அம்சத்தில் அவர்களின் கட்டிடக்கலை, சிற்பக்கலை அமைப்பு பாணியை தவிர்த்து. முத்தரையர் தாங்கள் அமைக்கும் குகைக்கோயிலில் குகைக்குள்ளேயே சுவற்றில்உள்ளமலையையேசிற்பங்களாகவடிப்பதாகும். சிலைகளை வெளியில்செய்துஉள்ளேவைப்பதல்லமுத்தரையர்கலை, இந்தமுறையிலேயே இக்கோயில் அமைந்துள்ளது.


அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
(பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம்,
கட்டிடக்கலைத்துறை & கட்டுமானத்துறை)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(கட்டடக்கலைத்துறை) மற்றும்
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்
' தமிழரின் கட்டடக்கலை தொழில்நுட்பம் "
Special Issue - Volume -2 Issue -2

பல்லவர்பாணியைஒட்டியே,

துவாரபாலகர்எனும்வாயிற்காப்போர்க்குஇரண்டுகைகள்மட்டும்உள்ளன, இத்தகையஅதிசயம், காவல்காப்போர்இருவரும், இக்கோயில்அமையமிகுந்தஈடுபாடுகொண்டிருந்தவர்களாவார்கள்.

கருவறையின்பின்புலத்தில்சுவற்றில்அரக்கர்களும்தேவர்களும்காணப்படுகின்றனர். இக்கோயிலில்ஒன்பதுகல்வெட்டுகள்உள்ளனகண்நோய்கண்டிப்பாகதீரும் இச்செய்திகல்வெட்டுஅடிப்படையில்நிகழ்ந்தசெயலாகும்.

க.எண்.35ல்மண்டபத்திலுள்ளஒருதூணில்...

1. கோவிராஜகேசரிப
2. ந்வற்குயாண்டுசய (40) இவ்வாண்டு
3. திருவாலத்தூர்மலைஅனம ............
4. கண்டன் ................

அழிந்துபட்டநிலையில்இந்தகல்வெட்டுஉள்ளது..

பு.க.எண்.116ல்வீரராஜேந்திரசோழனின்உயச (24)வதுஆட்சியாண்டில்இக்கோவிலுக்குநிலக்கொடையளிக்கப்பட்டுள்ளது.

பு.க.எண்.757ல்விஜயநகரப்பேரரசு, சதாசிவதேவரின்கி.பி.1558ம்ஆண்டுகல்வெட்டும்

பு.க.எண்.771ல்குடபோகத்தூணில்உள்ளகல்வெட்டு, திருவிளக்குவைக்கப்பட்டதையும்

பு.க.எண்.904ல்குடபோகக்கோவிலின்வடபுறம்சுவற்றில்உள்ளகல்வெட்டுவிசித்திரமானது.

இப்பகுதியில்பிரபலமாகவாழ்ந்தவர்இங்குள்ளதேவடியாளுடன்தொடர்புகொண்டிருந்தார்.

ஒரு நாள் தேவடியாள் இங்குள்ள பிராமணருடன் கூடியிருந்தால் அன்று இந்த பிரபலமானவரும் தேவடியாள் வீட்டிற்கு சென்றுள்ளார். சென்றவர் தேவடியாளும் பிராமணனும் கூடி இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார், இருவரையும் வீட்டிலேயே வெட்டிக் கொன்றுவிட்டார், ஒன்றுமே நடக்காதது போல தன் வீட்டிற்கு சென்றுவிட்டார் தேவடியாளின் சாபத்தால்வாகீஸ்வரர் இவனது கண்பார்வையை இழக்கச் செய்தார் பார்வையற்றவன் பலவாறு தீர்க்க பாடுபட்டார் நோய் தீர்ந்தபாடில்லை.

பின்னர் தான் செய்த கொலை பாதகமே கண்தெரியாமல் போனது என்றும், வாகீஸ்வரரை வேண்டிநிலக் கொடையளித்து தனக்கு கண்தெரிய வேண்டும் என்று மனமுருகி வேண்டினார். அதன்படியேபக்தியைமெச்சிகண்பார்வையைதிரும்பகொடுத்தார்வாகீஸ்வரர். தான் செய்த பிரமாதின் படிநிலக்கொடை அளித்து கல்வெட்டியுள்ளார்.

பு.க.எண்.904. மலையடிப்பட்டி கோயில் குடபோகக் கோயிலில் வடபுறம் சுவரில்,

1. வெகுதாநிய
2. ஸ்ரீதய்மியக (11)உ
3. வாகீஸ்வரசாமியா

4. ருக்குவடிவுள்ளமங்
5. கைக்குபூச்சிகுடியில்யி
6. ருக்கும்ஆவுடையாதேவ
7. ர்திருநெடுங்கொள
8. ம்தேவடியாள்வீ
9. ட்டுக்குபோயிருக்கச்செம
10. றுபடிஒருபிராமண
11. னைஅழைச்சுவிட்டுலெ
12. இருந்தபடியினாலேனா
13. ன்அவர்கள்ரெண்டு
14. பேரையும்வெட்டிப்போட்டு
15. மலையடிக்கிவந்தவிட
16. த்திலேரெண்டுகண்ணு
17. ம்தெரியாதேபோன
18. படியினாலேஇத்தோ
19. ஷம்போக
20. (வாகீஸ்வர)
21. ஸ்வாமிக்குஎன்னு
22. டவயல்கல்லு
23. ப்போட்டுகுடுக்கு
24. றோம்என்று
25. வேண்டுகொண்
26. டுஎனக்குகண்
27. தெரிஞ்சபடியினா
28. லெஎன்னுடை
29. யகாணியான
30. ஆவுடையான்குடிக்கா
31. டுனாங்கெல்லைஉள்
32. பட்டநிலமும்கல்ப்
33. பொட்டுகுடுத்தேன்இந்
34. நிலம் (ஸ்வாமி) யெழுதி
35. இ (சாதனமும்)
36. எழுதிக்கொடுத்தேன்இ


Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

37. ந்தநிலத்தில்யா
38. தாமொருவன்பொ
39. குபண்ணினால்வா
40. (வாகீஸ்வரசுவாமி) ச
41. ன்னதிதொ
42. றொகியாகபோ
43. வ(...)ன்கெங்கைக்
44. கரையில்காரா
45. ம்பசுவைகொண்
46. ணதோஷத்திலே
47. போவான்

என்றுகல்வெட்டுதெரிவிக்கிறது.

இதன்காரணமாககண்கோளாறுஉள்ளவர்கள்இங்குசனிக்கிழமைகளில்வந்துபெருமாளுக்குநெய்விளக்குஏற்றியும்துளசிமாலைஅணிவித்துபிரார்த்தனைசெய்கின்றனர்இதன்மூலம்கண்நோய்களைபோக்குகிறார்இவருக்குகண்ஒளிவழங்கும்பெருமாள்என்றசிறப்புபெயரும்உண்டுஇக்கோயிலில்சிவன்விஷ்ணு இருவரையும்ஒரேகுடைவரையில்தரிசிப்பதுசைவவைணவஒற்றுமைக்குஎடுத்தகாட்டாகும்





பு.க.எண். 912ல் விஷ்ணு சந்நிதிக்கு முன்புள்ள ஒரு தூணில், அச்சுதப்ப நாயக்கர் மன்னரின், 18ம்நாள், ஐப்பசி மாதம் வெட்டப்பட்ட கண் நிறைந்த பெருமாளுக்கு பூமி தானமாக கொடுத்தகல் வெட்டாகும். பாரவெளி, காலியாவயல் விதாறிவயல், வண்ணான்வயல், சிறுவடைவயல், நல்லிநத்தம், சாமத்திவயல், வெட்டிவயல்ஆக.. 9 கிராமத்திலுமாக நிலக்கொடை அளித்துள்ளனர். அச்சுதப்பநாயக்கர், பு.க.எண்.943ல் பெருமாள்கோயில் அம்மன் வாசற்படி பக்கச்சுவற்றில் உள்ளகல்வெட்டில், சுபகிருது வருஷம் அற்பசிமாதம் 10ம்தேதி வெட்டப்பட்டகல் வெட்டில், அரையர்களில் செல்லப்பொக்கான் புத்திரன் மங்கான் தென்கொண்டான், நாச்சியாரையும், கோவிலையும், உண்டாக்கினார் என்று கல்வெட்டு கூறுகிறது. பு.க.எண்.1109ல் பெருமாள் கோயில் படிக்கட்டில் திருப்பதி என்ற குறிப்பு கொண்ட கல்வெட்டு உள்ளது.

இவ்வாறுகாலத்தால்மூத்தஅரையனானவிடேல்விடுகுமுத்தரையனானகுவாவன்சாத்தனால்ஆ

திகாலத்தேஅமைக்கப்பட்டஇக்கோயில்இக்கோயிலின்சிறப்புகளைஅறிந்துகொண்டமன்னர்களும்மக்களும்ஆகஒன்பதுகல்வெட்டுகளில்தெரிவித்துள்ளனர்.

இனிகோயில்களின்பொதுவிவரங்களைக்காண்போம்இம்மலையில்சிவனுக்கும்விஷ்ணுவுக்கும்ஒரேமலையில்தனித்தனியேகுடைவரைகளைகுடைத்துள்ளான்விடேல்விடுகு இம்முத்தரையனுக்குகுவாவன்சாத்தன்என்றுபெயரும்உண்டு. இவனுக்குகுவாவன்மாறன்என்றுஒருசகோதரர்இருந்தார். இவர்களின்தந்தையேகுவாவன்முத்தரையன்என்பவர்ஆவார்.

குவாவன்மாறன்தஞ்சைமாவட்டம்செந்தலைபகுதியிலும், குவாவன்சாத்தன்புதுக்கோட்டைமாவட்டம்மலையடிப்பட்டி, (குன்றுஆண்டார்கோயில்) பகுதியிலும்ஆண்டுள்ளனர். குவாவன்சாத்தன்தனி மன்னனாகவும் பல்லவர்களின் அபிமானம் பெற்றவனாகவும் இருந்திருக்க வேண்டும் இவன் தான் குடைவரைக் குடைந்து தன்னைத்தானே துவாரபால கராகசிலை வடித்திருக்க வேண்டும். குடைவரையின் காலம் கிபி791-846 ஆகும். இந்த குடைவரைக் கோயில் சிறப்பு மாமல்லபுரத்து அமைப்பை ஒத்திருப்பதாக வரலாற்று அறிஞர்கள் வியந்து பாராட்டுகின்றனர். குட்டிக்கு பேன்பார்க்கும் தாய்குரங்கின் சிற்பவேலை மிகச்சிறப்புடையதாகும் பிற்கால மன்னர்கள் இக்கோயிலில் புதிய அமைப்புகளையும் கல்வெட்டுகளையும் சேர்த்துள்ளனர்.

ஒரே இடத்தில் சப்தமாத்ருகாசிலை என்ற, வீரபத்திரர், பிராம்மி, மகேஸ்வரி, கவுமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி, கணேசர், ஆகிய சிலை அமைப்பை காண கண்கோடி வேண்டும். இந்தக் குகைக்கோயில் திருமெய்யம் குகைக்கோயிலை ஒத்ததாகவே உள்ளது சிந்திக்கதக்கதாகும். மகிஷாசுரமர்த்தினி அசுரனை ஈட்டியால் குத்தம் சிறப்பு அமைப்பு அபூர்வமாகும்.

இங்குள்ள விஷ்ணு குகைக்கோயிலில் பெருமாள் பள்ளிகொண்ட பெருமானாக காட்சி தருகிறார் அவருக்கு வலப்பக்கம் பூவராகரும் இடப்பக்கம்யோக நரசிம்மரும் உள்ளனர், வலப்பக்க சுவற்றில் மகாவிஷ்ணு ஸ்ரீதேவி பூதேவி நின்ற நிலையிலும், இடப்பக்கம் சுவரில் அதே கடவுளர்கள் அமர்ந்த நிலையிலும் செதுக்கப்பட்டுள்ளனர். முன்மண்டபத்தை இரண்டு சிம்மத்தூண்கள் தாங்கிகுடையப்பட்டுள்ளது. இதற்கு இருபக்கத்திலும் இரண்டு துவாரபாலகர்கள் காவல் காக்கின்றனர் . இவை அனைத்தும் மலையை குடைந்து செதுக்கப்பட்ட சிற்பங்களாகும்.

இங்குள்ளலிங்கத்திற்கு இருபக்கத்திலும் துவாரபாலகர்கள் எதிர்சுவற்றில் சுப்பிரமணியன், ஹரிஹரன், துர்கை, துர்க்கைமகிஷாசுரனுடன் போரிடும்காட்சி, அதிலும் போருக்குப் புறப்படுவது போன்றும், அடுத்து துர்க்கை மகிஷாசுரனை வென்று வெற்றிக்களிப்பில் நிற்பது போன்று உள்ளது. இவ்வாறு தொல்பொருள் இயக்குனர் திருநடன காசிநாதன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்ட முத்தரையர் மன்னர்கள் என்ற நூலில் புலவர் பூசி தமிழரசன் அவர்கள் கூறியிருப்பதாவது. நந்திவர்மபல்லவவேந்தன் (கி.பி.796-846)ல் 16 ஆம் ஆட்சியாண்டில்

விடேல் விடுகு முத்தரையனாகிய குவாவன்சாத்தன் ஆலத்தூர் மலையில் கிபி 812ல் குடைவித்து சிவன் கோயிலை உருவாக்கினார். அதில் படாரரை எழுப்பி விழா எடுத்தார். இக்குடை வரை முதல் மகேந்திரவர்மபல்லவன் குடைவித்த குடைவரையின் பாணியில் குடைவிக்கப்பட்டுள்ளது. குடைவரைக் கோயில் உருவாக்கப்பட்ட பின் ஆலத்தூர் திருஆலத்தூர் என்று பெருமை பெற்றுள்ளது.

இங்குள்ள மலையடிப்பட்டி சிவன்கோயில் குடைவரை சிறியதாக உள்ளது ஆனால் காலத்தாலும் அமைப்பாலும் பழமைச் சிறப்பைப் பெற்றுள்ளது. இயற்கை சீற்றங்களால் காற்று மழை வெப்பம் தாக்காமல் இருக்க குடைவரையில் உட்கூடம் குடைவிக்கப்பட்டுள்ளது. இது அரை பகுதியைக் கொண்டது. லிங்கம் வைத்து குடைவிக்கப்பட்டுள்ளது. மற்றொரு அரைப்பகுதி முன்மண்டப கூடமாக உள்ளது. முன்மண்டபத்தில் காளை பீடத்துடன் உள்ளது.

குடைவரையில் இடப்பக்கம் உள்ள வீரபத்திரர்சிற்பம் சிதைந்துள்ளது. இங்குள்ள ஏழுதாயார் சிற்பவரிசை ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு வைக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பல கோயில்கள் ஆலயங்களிலும் சப்தமாதர்கள் வழிபாட்டுக்கு காரணமாக முத்தரையர்கள் ஆட்சி இருந்துள்ளது.

மண்டப பாறைச் சுவற்றில் மற்ற சிற்பங்களான பிள்ளையார், சிவன், திருமால், மகிசாசுரமர்த்தினி, ஆகியவை செதுக்கப்பட்டுள்ளன. துர்க்கை அல்லது மகிஷாசுரமர்த்தினி சிற்பத் தொகுதி குறிப்பிடத்தக்க சிறப்பை பெற்றுள்ளது. இச்சிற்பத்தில் எட்டுகைகள் உள்ளன. சிங்கத்தின்மீதுதன்இருகால்களையும்வைத்துஅமர்ந்தநிலையில்உள்ளது. ஈட்டியை கையில் வைத்துள்ளார். இக்காட்சி எருமைத்தலை கொண்ட அசுரனை அழிக்க புறப்படது போல இருக்கிறது.

இக்குடைவரையில் உள்ளது வார பாலகர் பல்லவர் பாணியைப் போல் இரண்டு கைகளையே பெற்றுள்ளனர். ஒருவர் மாட்டுக் கொம்புடன் உள்ளதோடு முடியும் (கிரீடம்) சூட்டியுள்ளார். இங்குள்ள வாயில்காப் போர் எளிமையாக காணப்படினும் புதுமையாகவும் தோற்றமளிக்கப்படுகிறார். இங்கு உள்ள திருமால் குடைவரை படைப்பும் முத்தரையர் அமைப்பே ஆகும் என்று கூறுகின்றனர்.

**துணைநூற்பட்டியல்** :

இரா.திருமலை நம்பி வரலாற்றில் முத்தரையர் இபுதுக்கோட்டைமாவட்டம் - 1995

இரா.திருமலை நம்பி வரலாற்றுக் காலகோயில்களும் முத்தரையர்களும் திருவரங்குளம் வட்டாரம் - 1995

தி.இராஜமாணிக்கம்- தென்னககுடவரைக்கோயில்கள் 1989 திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

வரலாற்றில் தஞ்சை- தமிழ்நாடுஅரசுதொல்பொருள்ஆய்வுத்துறைஇ 1994

இராதிருமலை நம்பி- புதுக்கோட்டை மாவட்ட சமுதாய ஆவணங்கள்

திரு.செந்தமிழ்செல்வன் முத்தரையர் வரலாறு 1973

நடனகாசிநாதன்- முத்தரையர் 1994

புலவர்க.மருதமுத்து- முத்தரையர்வரலாறுஓர்அறிமுகம்இ1975

ம. இராஜசேகரதங்கமணி – இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையர் என்ற சுவரன்மாறன் 1994

பேராசிரியர்மீ.சந்திரசேகரன்- முத்தரையர் பேரரசு வரலாற்றில் குடைவரைக் கோயில்கள் அகஸ்தியர் நூலகம்திருச்சி - 2023

பேராசிரியர்மீ.சந்திரசேகரன்- முத்தரையர் கல்வெட்டுகள் அகஸ்தயர் நூலகம் திருச்சி-2022

பேராசிரியர்மீ.சந்திரசேகரன்-முத்தரையர் பேரரசு அகஸ்தியர் நூலகம் திருச்சி-2023

பேராசிரியர்மீ.சந்திரசேகரன்- மெய்க்கீர்த்தி அகஸ்தியர் நூலகம் திருச்சி-2022